# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, மாச்சு மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

*[2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஓ 6/2012*

### 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2012ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

*2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "விடயத்திற்கேற்ப, இச்சட்டத்திற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை II இல்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "விடயத்திற்கேற்ப, இச்சட்டத்திற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை II இல் அல்லது அட்டவணை III இல்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் அதன் (இ) என்னும் பந்தியை நீக்கம் செய்து, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(இ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2012, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில்;

(ஈ) 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான

மொத்த விற்பனை வரவு ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில்"; அத்துடன்

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் –

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் "கூட்டு மொத்த விற்பனை வரவு எனப் பொருள்படும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும்:–

"கூட்டு மொத்த விற்பனை வரவு எனப் பொருள் படும் :

ஆயினும், 2012 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் இயைபான காலாண்டு தொடர்பில், அத்தகைய காலாண்டு தொடங்குவதற்கு நேர்முன்னர் முடிவுற்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வரிமதிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வியாபாரத்திலிருந்து தொழிலிலிருந்து, உயர் தொழிலிலிருந்து அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்து இலாபங்களைக் கொண்டிருக்கின்றவாறான வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகம் சைபருக்கும் அதிகமாக இருக்குமிடத்து, அத்தகைய காலாண்டிற்கான இயைபான மொத்த விற்பனை வரவு சைபராகக் கருதப்படுதல் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்–

(i) (அ) என்னும் உட்பந்தியின் (viii) ஆம் விடயத்தில் "தொழிற்பாடுகளிலிருந் தான பெறுகைகள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொழிற்பாடு களிலிருந்தான பெறுகைகள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) (அ) என்னும் உட்பந்தியின் (viii)ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(ix) அத்தகைய உற்பத்திப் பொருளின் எவரேனும் உற்பத்தியாளரால் ஏதேனும் களிமண் கூரை ஓட்டின் அல்லது மட்கல உற்பத்திப் பொருளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்; அத்துடன்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IIஐ மாற்றீடு செய்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை II இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது :-

"**அட்டவணை** II (பிரிவு 2)

**2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கி 2012 மாச்சு 31ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு**

| செலுத்தத்தகு மொத்த விற்பனை வரவின் பாகம் | அப்பாகத்திற்கு ஏற்புடையதாலதான சேவை விதிப்பனவின் வீதம் |
|---|---|
| 1. (அ) மு.ச. ஆடை ஏற்றுமதியாளர்களின் | 0.1 % |
| (ஆ) மு.ச. வியாபார இல்லங்களின் | |
| (இ) ஏற்றுமதியாளர்களுக்கு விநியோகிப்பதற்கு மு.ச. புடவை உற்பத்தியாளர்களின் | |
| 2. (அ) எந்த இலாபங்களிலிருந்து வருமான வரி விலக்களிக்கப் படுகின்றதோ அந்த இலாபங்கள் | 0.25% |
| (ஆ) சலுகை வீதங்களின்படி வரி | |
| (இ) ஒரு நட்டம் | |
| (ஈ) மொத்த விற்பனையில் அல்லது சில்லறை விற்பனையில் ஈடுபட்டுள்ள ஆட்கள் (பொ.சே.வி. வில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு | |

| செலுத்தத்தகு மொத்த விற்பனை வரவின் பாகம் | அப்பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான சேவை விதிப்பனவின் வீதம் |
|---|---|
| உற்பத்தியாளர்களாலும் விநியோகத்தர்களாலும் அத்துடன் மோட்டார் வாகனங்களின் மதுபான அல்லது புகையிலை உற்பத்திப் பொருட்களின் வியாபாரிகளாலும் மேற்கொள்ளப்படும் விற்பனையைத் தவிர) | |
| (உ) உலர்த்திய தேங்காய், தேங்காய் எண்ணெய், தென்னந் தும்பு, கொப்பறா மற்றும் இரப்பர் தாள் உட்பட தேயிலையின், இரப்பரின் அல்லது தென்னையின் முதனிலை மாற்றத்திலிருந்து (மதுசாரப் பானங்கள் புற நீங்கலாக) | 0.25% |
| (ஊ) விளம்பர முகவர்களின் | |
| 3. பின்வருவன உட்பட வேறு ஏதேனும் தொழிலின்- | |
| (அ) மோட்டார் வாகனங்களின், மதுபான அல்லது புகையிலை உற்பத்திப் பொருட்களின் வியாபாரிகள் | |
| (ஆ) வர்த்தமானி அறிவித்தலில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு மொத்த விற்பனை வரவின் அந்தந்த வரைவிலக்கணங்களைக் கடைப்பிடிக்கும் விருப்புத் தெரிவை மேற்கொண்ட தொழில்கள் (தொடக்க நிலை எவ்வாறிருப்பினும்) | 1%” |

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IIIஐ உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணை இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் அட்டவணை III என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"**அட்டவணை** III (பிரிவு 2)

***2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் காலப்பகுதிக்கு***

| | |
|---|---|
| செலுத்தத்தகு மொத்த விற்பனை வரவின் மீது | *0.25 சத வீதம்*" |

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**5**. இச்சட்டத்தின் 3ஆம் பிரிவால் அட்டவணை II இற்கு மாற்றீடு செய்யப்பட்டவாறான எல்லா நோக்கங்களுக்காகவும் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்